# கோவை ஜாக்கிரதை!

## அலறும் மக்கள்!

'மகிழ்வுடன் வாழ ஏற்ற நகரம்' என்ற தலைப்பில் இந்திய அளவில் அவ்வப்போது வெளியிடப் படும் ஆய்வு முடிவுகளில் கோவைக்கும் ஒரு இடம் நிச்சயம். ஆனால், கோவைவாசிகளை கேட்டாலோ... அதன் அவலட்சணங்கள் அணிவகுக்கின்றன. அதில் மிக முக்கியமானது நாய்த் தொல்லை!

கோவையில் மக்கள் நெருக்கம் எந்த அளவுக்கு உயர்ந்து கொண்டே போகிறதோ, அந்த அளவுக்கு தெரு நாய்களின் எண்ணிக்கையும் எகிறிக்கொண்டே போகிறது. பெரும் படையாக வீதிதோறும் இவை நடத்தும் ராஜ்ஜியம் போதாதென்று, பொதுமக்கள் அதிகம் புழங்கும் இடங்களிலும் குட்டி குளுவான்களோடு கொட்டமடிக்கின்றன. ஈச்சனாரி மற்றும் பேரூர் கோயில்கள், கலெக்டர் அலுவலகம் என்று மக்கள் பெருமளவில் புழங்கும் ஏரியாக்களிலும் செம ஜபர்தஸ்துடன் வலம் வருகிறது நாய்ப் பட்டாளம். அதிலும், நகரின் மையப்பகுதியில் இருக்கும் கோர்ட் வளாகத்தில் குறைந்தது முப்பது நாய்கள் குடியிருக்கின்றன. கொலை, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் பறிமுதல் செய்யப் பட்ட கார்கள், வேன்கள் போன்றவை பல காலமாக கோர்ட்டில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இவற்றின் அடியில் நிம்மதியாக செட்டிலாகும் நாய்கள், பரபரப் பான கோர்ட் வேலை நேரத்தின்போது பசி மற்றும் இன்னபிற விஷயங்களுக்காக ஒன்றுக்கொன்று அடித்துக் கொண்டு வருவோர், போவோர் மீது விழுந்து பிறாண்டு கின்றன. இதனால் கோர்ட்டுக்கு வரும் வக்கீல்களும் பொதுமக்களும் பீதியில் உறைந்து போகிறார்கள்.

கடந்த 16-ம் தேதி மருதமலையில் சாமி கும்பிடுவதற் காக ஈரோட்டைச் சேர்ந்த ரமேஷ், தன் குடும்பத்துடன் வந்திருக்கிறார். அவரின் இரண்டு வயது மகள் திவ்யாவின் கையிலிருந்த பிஸ்கெட்டைப் பறிப்பதற்காக சுமார் ஆறு நாய்கள் கொண்ட பட்டாளம் அவளைப் புரட்டி எடுத்த சம்பவம் பக்தர்களைப் பதறவைத்தது. இது போல், ஏகப் பட்ட உதாரணங்கள் சொல்லலாம்.

கோவையைச் சேர்ந்த சமூகநல ஆர்வலரான யோகநாதன் நாய்த் தொல்லை பற்றி மனம் நொந்து நம்மிடம் பேசினார்.



தெரு நாய்கள் ஊர்வலம்...

"மனுஷனோடு இயைந்து வாழும் குணமுடைய சமுதாயப் பிராணிதான் நாய். ஆனா, அதோட எண்ணிக் கையும் போக்கும் எல்லை மீறிப் போறப்பத்தான் கவலைப்பட வேண்டியிருக்கு. அதற்காக நாய்களைக் கொல்லச் சொல்லலை, அதன் இனப்பெருக்க அளவைக் கட்டுக்குள் கொண்டுவந்தாலே... பிரச்னை குறையும். கோவை செல்வபுரத்தைச் சேர்ந்த அஜீத்ங்கிற சின்னப் பையனும், சின்னசாமிங்கிறவரும் நாய்களால் குதறப்பட்டு, இறந்த சம்பவங்களை யாரும் மறந்திருக்க முடியாது. புறநகரான காங்கேயம்பாளையத்துல தனலட்சுமிங்கிற பொண்ணு பத்துக்கும் மேற்பட்ட நாய்களால கடிச்சுக் குதறப்பட்ட கொடுமையையும், நீலகிரியில நாகராஜ்ங்கிற சிறுவன் தலை, மார்பு, முகம்னு உடல் முழுவதும் பல நாய் களால குதறப்பட்டு, சுமார் நானூறு தையல் போடப்பட்ட குரூரத்தையும் ஜென்மத் துக்கும் நம்மால மறக்க முடியாது. இந்தத் தொடர் பயங்கரங்களுக்குப் பிறகு, கோவை மாநகராட்சி நாய்ப் பிரச்னையில தீவிரம் காட்டிச்சு. தெருநாய்களைப் பிடிச்சு ஊசி போடுறது, இனப்பெருக்கத்தைக் கட்டுப் படுத்த ஆபரேஷன் செய்யறதுன்னு நடவ டிக்கை எடுத்திட்டிருந்தாங்க. ஆனா, இப்போ அதையெல்லாம் மறந்துட்டாங்களோன்னு சந்தேகமா இருக்குது. மாநகராட்சி பகுதியில இருக்கிற ஒவ்வொரு வீட்டுக்கும் தண்ணி சப்ளை, தெருக்களை சுத்தம் பண்றது போல நாய் தொந்தரவுகளையும் கட்டுப்பாட் டுக்குள்ள வைக்கவேண்டியது மாநகராட் சியோட கடமை. இதை அவங்க சரியா செஞ்சாத்தான் கோவை மாநகர மக்கள் நிம்மதியா இருக்க முடியும்!" என்றார்.



காருக்கு அடியில் ஓய்வு...

கோவை மாநகராட்சியின் மூன்றாவது வார்டு கவுன்சிலரான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பத்மனாபன், "கோவை மாநகர்ல இருக்கக் கூடிய கோழி, ஆடு, மாடு இறைச்சிக் கடைகள்ல விழுற கழிவு களை அகற்றினாலே நாய்களோட எண்ணிக்கை வெகுவா குறைஞ்சுடும். இதுக்கு சரியான நடவடிக்கையை மாநகராட்சி உடனடியா எடுக்கணும். அதேநேரத்துல, வரப்போற மாமன்றக் கூட்டத்துல தெரு நாய் விவகாரத்தை நாங்க வீரியமாக் கிளப்பப்போறோம்!" என்றார்.

பத்மனாபன்



அன்சுல் மிஸ்ரா



யோகநாதன்



கோவை மாநகராட்சியின் ஆணையாளரான அன்சுல் மிஸ்ராவிடம் பேசியபோது, "மாநகரப் பகுதியில் நாய்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாகத் தொடர்ந்து புகார் வந்துகொண்டே இருக்கிறது. நாங்களும் அதற்கான நடவடிக்கையை புகார் வரும்போதே எடுக்கத் துவங்கி விடுகிறோம். நாய்களைக் கொன்று எண்ணிக் கையைக் கட்டுப்படுத்துவதற்கு எதிராகப் பல சட்டதிட் டங்கள் இருக்கிறது. அதனால், பெண் நாய்களைப் பிடித்து, அவற்றுக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்து விடுகிறோம். இதற்காக மாநகராட்சி சார்பில் தனியாக ஒரு மையம் அமைக்கப்பட்டிருக்கிறது. நீங்களே கவனித்துப் பாருங்கள்... தெருவில் அலையும் நாய்களின் காதில் ஆங்கில 'வி' வடிவத்தில் ஒரு வெட்டு இருக்கும். அந்த நாய்க்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்று அர்த்தம். இதையெல்லாம் தாண்டி, பொதுமக்களும் எங்களுக்கு இந்த விஷயத்தில் உதவ வேண்டும். தங்கள் நாய்களுக்கு அவர்களும் தடுப்பூசி போடுவதில்லை. ஊசி போட வரும் எங்கள் பணியாளரிடமும் சண்டை போடுகிறார் கள். எங்கள் நடவடிக்கை எல்லாம் மக்கள் நலனுக் கானது என்று அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்!" என்றார் தெளிவாக.

தப்பு யாருடையதோ... சீக்கிரமே பிரச் னையை சரிசெய்யாவிட்டால், 'கோவை மாநகராட்சி உங்களை வரவேற்கிறது' என்று போர்டிலேயே உறுமும் கோரைப் பற்களையும் அடையாளமாகப் போட வேண்டி வரும், ஜாக்கிரதை!

**- எஸ்.ஷக்தி**

படங்கள்: **வி.ராஜேஷ்**